2016

No. of Printed Pages : **4**

2016 401577

**5961**

*Register Number*

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி　　　　　　　　　　　　　　　　　　　　மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**10x2=20**

1. ‘பனையோலை’ என்னும் சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

2. மூன்றாம் வேற்றுமை உருபுகள் எவை ? அவை எந்தெந்தப் பொருள்களில் வருமென எழுதுக.

3. ‘யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு’
　　- என்ற குறள் உணர்த்தும் பொருளை எழுதுக.

4. உருபு மயக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

5. கட்டுரை எழுதுவோர் பின்பற்ற வேண்டிய பொது விதிகள் நான்கினை எழுதுக.

6. ஏழாம் வேற்றுமையில் தற்கிழமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

7. வல்லெழுத்து மிகும் இடங்கள் இரண்டினை எழுதி விளக்குக.

8. ‘பொங்கலுண்டான்’ - எவ்வகை ஆகுபெயர் என்பதைக் காரணத்துடன் எழுதுக.

[ Turn over

9. ஓரெழுத்துச் சொற்கள் நான்கினைப் பொருளுடன் எழுதுக.

10. வழுவமைதியின் இலக்கணம் யாது ?

II. எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கு 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x4=20**

11. பண்புப்பெயர் புணர்ச்சிக்கான நூற்பாவினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

12. பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

13. கீழ்க்காணும் பாடலைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

வைததனை <u>இன்சொல்லாக்</u> கொள்வானும் நெய்பெய்த
<u>சோறென்று</u> கூழை மதிப்பானும் - ஊறிய
கைப்பதனைக் கட்டிஎன்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

- திரிகடுகம்.

(1) கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

(2) பாடலின் திரண்ட கருத்தை எழுதுக.

(3) மெய்ப்பொருள் கண்டு வாழும் மூவர் யாவர்?

14. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கு குறிப்புச் சட்டகம் தயாரித்து, தேவையான மேற்கோள்கள், பழமொழிகள் நான்கினை எழுதுக.

15. உரையாடலைச் செய்தியாக்குவதற்கான வழி முறைகள் யாவை?

16. நீரின்றி, சேவடி - இச்சொற்களைப் பிரித்தெழுதி புணர்ச்சி விதி எழுதுக.

17. வேற்றுமை என்றால் என்ன? அதன் உருபையும் பொருளையும் பட்டியலிடுக.

18. ''வாழ்வுக்கியைந்த காடுகளும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளோடு மிடைந்தும், தனியே சிறந்தும் செறியும் காடுகள், வெயில் தகைந்து அளிக்கும் காரிருள் நிழலும், வண்டு துவைப்பத் தேன் பூங்காவனங்களின்றும் கமழும் நறுநாற்றமும், வான்பரந்த பொழில்களின் நிரையும், கான் பரந்த தூறுகளின் ஈட்டமும், கொழுங்கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன வல்லவோ''?

-இப்பத்தியின் உரைநடைச் சிறப்பை எழுதுக.

## பகுதி - ஆ

III. அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

19. மொழி பழகுவதற்கும், கற்றலுக்குமுள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

20. வட்டார கிளைமொழி அறிவு, ஆசிரியருக்குத் தேவை. காரணத்தை எழுதுக.

21. மொழியின் அடிப்படைத் திறன்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

22. படித்தல் திறனின் குறிக்கோள்கள் யாவை?

23. இலக்கணம் கற்பிக்கும் முறைகள் எத்தனை? அவற்றை எழுதுக.

24. செய்யுள் கற்பித்தலுக்கான நோக்கங்களில் நான்கினை எழுதுக.

25. தொடக்கநிலை வகுப்புகளுக்குத் தமிழ் கற்பித்தலில் எத்தகைய விளையாட்டு முறைகளைப் பயன்படுத்துவாய்?

26. மொழிப் பாடத்திற்கான ஒப்படைப்புகள் இரண்டினை எழுதுக.

27. தமிழில் நிகண்டுகள் குறித்து எழுதுக.

28. பாடங் கற்பிப்புத் திட்டம் என்றால் என்ன?

**IV.** எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

29. மொழியின் இயல்புகளை விளக்கி எழுதுக.

30. பேசுதல் திறனை வளர்க்கும் வழி வகைகள் நான்கினை விளக்குக.

31. உரைநடையின் வகைகளை எழுதி, இரண்டிற்கு விளக்கம் எழுதுக.

32. விதிவரு முறையில் இலக்கணம் கற்பித்தலை இரண்டு எடுத்துக்காட்டுகள் வழி நிறுவுக.

33. கற்றல் பொருட்களின் பயன்கள் யாவை ?

34. பல் வகுப்புக் கற்பித்தலில் வகுப்பறை நிருவாகம் மற்றும் திறன் ஒருங்கிணைப்புக் குறித்து எழுதுக.

35. மொழிசார் செய்திகளைத் திரட்டுவதற்குரிய வள மூலங்கள் யாவை?

36. செயல்வழிக் கற்றல் வகுப்பறையில் மாணவ ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளை விளக்குக.

## பகுதி - இ

**V.** ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) கேட்டல் திறனை வளர்க்கும் வழி வகைகளை விவரித்து எழுதுக.

**அல்லது**

(ஆ) விரிவுரை முறையினை விளக்கி அதன் நிறைகுறைகளை ஆராய்க.

38. (அ) துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களையும் முறைகளையும் விளக்குக.

**அல்லது**

(ஆ) ஐந்தாம் வகுப்பிற்கான பாடங் கற்பிப்புத் திட்டம் தயாரித்தலின் படி-நிலைகளை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

-o0o-